**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.121/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மாரிமுத்து | த–பெ /க.பெ. | முத்துக்குமார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2026**

------------------------------------------------------------------------------------------------

02.06.2026
**குறுக்கு விசாரணை:**

**1) எதிரியை எத்தனை வருடம் எனக்கு பழக்கம் என்றால் எதிரி எனது குடும்ப நண்பர் ஆவார். பல வருடங்களாக தெரியும். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் டிகிரி முடித்துள்ளார். எதிரி 10 வது வரைதான் படித்துள்ளார் என்றாலும், டிகிரி படிக்கவில்லை என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. டிகிரி முடித்துள்ளதாக என்னிடம் கூறினார். Fleurss Apparelss –ல் event marketing எதிரி நடத்திவருகிறார் என்றால் சரிதான், எதிரி அரசாங்க பணியில் இல்லை என்றாலும் சரிதான். எதிரி இந்தியன் ஏர்போர்சில் பணி செய்யவில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்தியன் ஏர்போர்சில் வேலை பெறுவதற்காக எதிரிக்கு ரூ.45,00,000/– கொடுத்ததாக எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் வேலை வாங்கி தருவதாக கூறினார் என்று எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேலை**

வாங்கி தருவதாக எந்த இடத்தில் வைத்து பேசினோம் என்ற விபரத்தை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் வீட்டில் வைத்து பேசினார். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள், மூத்த மகள் 10- வது படித்து வருகிறார், இளைய மகள் 1ம்வகுப்பு படித்து வருகிறார். ரூ.45,00,000/- எனது சொந்த பணமா என்றால் இல்லை, எனது மற்றும் என் சகோதரி மலர்விழி அவர்களின் நகைகளை அடமானம் வைத்தும், சில நகைகளை விற்பனை செய்தும் பெற்ற பணம், மற்றும் அருகில் இருந்த நபர்களிடம் இருந்து கடனாகவும் பெற்று கொடுக்கப்பட்டது.

2) மலர்விழி என்ன படித்துள்ளார் என்றால் 12 வது வரை . என் சகோதரி என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டுக்குடித்தனம். என் சகோதரியின் மகன் பெயர் என்னவென்றால் பிரகாஷ். அவர் என்ன படித்துள்ளார் என்றால் B.Tech. Mec. ஆவடியில் பணி பார்த்தார் தற்போது துபாயில் வேலை பார்த்து வருகிறார்.

3) இந்தியன் ஏர்போர்சில் வேலை பெறவேண்டும் என்றால் எழுத்து தேர்வு, நேர்முகதேர்வு மற்றும் உடற்தகுதி தேர்வு, மருத்து தேர்வு முடிக்க வேண்டும் என்றால் சரிதான். என் சகோதரியின் மகன் பிரகாஷ் அரசு இந்தியன் ஏர்போர்ஸ் தேர்வில் கலந்து கொண்டார் என்றால் சரிதான். அதன் மதிப்பெண் என்னவென்றால் தற்போது நினைவில்லை, ஹால்டிக்கெட் மற்றும் மதிப்பெண் தொடர்பான ஆவணங்கள் வைத்துள்ளேன், தேவைப்பட்டால் சமர்பிக்க தயாராக உள்ளேன். அரசாங்க வேலைக்கு பணம் கொடுப்பது தவறு என்றால் எதிரிக்கு அதிகாரத்தை பயன்படுத்தி ஏர்போர்சில் பணி வாங்கி தருவதாக கூறினார், அதற்காக பணம் கொடுத்தேன். ரூ.45,00,000/- கொடுத்தேன் என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனது மற்றும் எனது கணவரின் வங்கி

**கணக்கில் இருந்து எதிரிக்கு ரூ.45,00,00/- கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் கணவரை தற்போதைய வழக்கில் சாட்சியாக தற்போது வைரை பட்டியல் இடவில்லை என்றால் சரிதான். என் கணவர் பெயர் மற்றும் என்ன பணியில் உள்ளார் என்றால் என் கணவர் முத்துக்குமார், தமிழ்நாடு போக்குவரத்து துறையில் பணிபுரிகிறார். வேலைக்காக பணம் கொடுத்த விபரம் என் கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். வருமானவரி செலுத்தாத பணம் வைத்திருப்பது கருப்பு பணம் என்றாலும், அதை பயன்படுத்துவது சட்டத்திற்கு முரணானது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.**

**4) எதிரி மீது இரண்டு காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்தியன் ஏர்போர்சில் வேலைக்காக ரூ.45,00,000/- எதிரிக்கு கொடுத்து பணம் திருப்பி தரவில்லை என்பதற்கான குற்றசாட்டிற்கு போதுமான ஆதாரத்தாலும் உறுதிபடுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரி இந்தியன் ஏர்போர்சில் வேலை வாங்கி தருவதாக ஒருபோதும் கூறவில்லை என்றால் சரியல்ல, எதிரி வேலை வாங்கி தருவதாகத்தான் கூறினார். எதிரியின் தொழிலில் முதலீடு செய்தவற்காக பணம் கொடுத்தேன் என்று கூறியது சரியல்ல என்றால் சரிதான், இந்தியன் ஏர்போர்சில் வேலை வாங்குவதற்காகத்தான் கொடுத்தேன். வழக்கில் எனது கோரிக்கையை வலுப்படுத்துவதற்காக உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.**

**( கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதற்காக குறுக்கு விசாரணை தொடர்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.02 04:09:06 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.